# வரவு செலவுத் திட்ட உரை

# 2017

கிழக்கு மாகாண சபை,
திருகோணமலை

கௌரவ தவிசாளர் அவர்களே,

கிழக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தினை இன்று இச்சபையின் முன் சமர்ப்பிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

தேசிய கொள்கைகளுடன் இணைந்து சகலருக்கும் நன்மை தரும் ''சமமான பிராந்திய, சமூக அபிவிருத்தி'' என்ற நல்லாட்சித் தத்துவத்துடன் மேலும் தகைமை ஆற்றலுடன் கூடிய ''தொலை நோக்குடனான நிலையான அபிவிருத்தி'' எனும் தொனிப்பொருளுடன் மக்களை மையப்படுத்திய அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நாம் அனைவரும் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

நல்லாட்சி, துரித அபிவிருத்தி எனும் பாதையில் எமது மாகாணத்திற்கான நடுத்தர கால அபிவிருத்தித்திட்டம், நிறுவன பெறுபேற்றுக்கட்டமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சாத்தியமான சகல அபிவிருத்திச் சந்தர்ப்பங்களையும் உள்வாங்கி பயன்மிக்க வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இவற்றின் வாயிலாக கிழக்கு மாகாணத்தில் அனைத்து அபிவிருத்தி பங்குதாரர்களையும் இணைத்து நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையவுள்ளோம் என்பதை இச்சபைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்தகாலங்களில் எமது மாகாணத்தில் அடையப் பெற்ற முன்னேற்றங்களுக்கு பங்களிப்புச் செய்திருந்த அனைவரிற்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன் மேலும் அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்புடன் எமது மாகாணம் சுபீட்சமான நிலையை விரைவில் அடையும் என நம்பிக்கை கொள்கின்றோம்.

## முன்னேற்றப்போக்கு

கௌரவ தவிசாளர் அவர்களே,

அனைத்து சமூகங்களுக்கிடையிலான சகவாழ்வு, சமத்துவ எண்ணக்கருக்களை உள்வாங்கி மாகாண நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து பல்துறை சார்ந்த சீரான பிராந்திய அபிவிருத்தி இலக்குகளை அடைந்துவருவதனையிட்டு நாம் பெருமிதம் அடைகிறோம்.

எமது மாகாணம் உள்ளூர் மட்டத்தில் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருவதுடன் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு கணிசமான பங்களிப்பையும் வழங்கி வருகிறது.

எமது மாகாணத்தின் அண்மைய சமூக பொருளாதார குறிகாட்டிகள் தேசிய குறிகாட்டிகளுக்கு அண்மித்த வகையில் முன்னேற்றமடைந்து காணப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் 0.125 ஆக இருந்த சமூக அபிவிருத்தி சுபீட்ச சுட்டெண் 2014 ஆம் ஆண்டில் 0.215 என்ற நிலையை எட்டியிருந்தது. எனினும் மாகாணங்களுக்கிடையே நாம் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றோம் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எமது மாகாணம் 5.8 வீத பங்களிப்பினை செலுத்தியிருந்த அதேவேளை மாகாண மொத்த உற்பத்தி நடைமுறை விலைகளில் 10.9 வீத வளர்ச்சியைக் காட்டியிருந்தது. இது தேசிய வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் அதிகமானதாகும்.
அண்மைக் காலங்களில் மாகாண பிரத்தியேக தேவைகள், வளங்கள், ஆற்றல்கள் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு அபிவிருத்திச் செயல்முறைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தமையும் இதற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

மேலும் மாகாணத்தின் நீண்டகால அபிவிருத்தியினை வலுப்படுத்தும் வகையில் பலதரப்பினரது பங்குபற்றுதலுடன் 2017- 2020 காலப்பகுதிக்கான இடைக்கால அபிவிருத்தி திட்டமும் அதனுடன் இணைந்த நிறுவன பெறுபேற்று கட்டமைப்பும் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அதன் இறுதி வெளியீடு அடுத்த ஆண்டின் முதலாவது சபை அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இத்திட்டத்தில் அடையாளம் காணப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள், விசேட கருத்திட்டங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதனூடாக துறைசார்ந்த இலக்குகளையும் மாகாண அபிவிருத்திக் கொள்கை இலக்குகளையும் அடையவுள்ளோம்.

## நிதி ஒதுக்கீடு

கௌரவ தவிசாளர் அவர்களே,

2017 ஆம் ஆண்டிற்கென கிழக்கு மாகாண சபையினால் கோரப்பட்ட நிதித் தேவையின் பிரகாரம் மீண்டெழும் செலவினங்களுக்கென சமர்ப்பிக்கப்பட்ட நிதித்தேவை 23,582 மில்லியன்களாக இருந்த போதும் எமது மாகாணத்திற்கு நிதி ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட தொகை 20,836 மில்லியன்கள் ஆகும். இது கோரப்பட்ட தொகையில் 88 வீதமாகும். மீண்டெழும் செலவினங்களில் பிரதானமாக ஆளுக்குரிய வேதனங்களிற்கென

16,491 மில்லியன்களும் ஏனைய செலவினங்களிற்கென 4,345 மில்லியன்களும் ஒதுக்கப்படுகின்றன.

இதேவேளை, மூலதனச் செலவினங்களுக்குரிய நிதித் தேவைகளுக்காக, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடையின் கீழ் 10,241 மில்லியன்கள் கோரப்பட்ட போதிலும் அனுமதிக்கப்பட்ட தொகை 1,544 மில்லியன்கள் மட்டுமேயாகும். இது கோரப்பட்ட தொகையில் 15 வீதமேயாகும். இதே போன்று பிரமாண அடிப்படையிலான கொடையின் கீழ் 1,408 மில்லியன்கள் கோரப்பட்ட போதிலும் எமது மாகாண சபைக்கென அனுமதிக்கப்பட்ட தொகை 514 மில்லியன்கள், இது கோரப்பட்ட தொகையில் 37 வீதம் ஆகும். இவற்றில் துறைசார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கென 1,807 மில்லியன்களும் மாகாண நிர்வாக உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 251 மில்லியன்களும் அத்துடன் வெளிநாட்டு நிதியளிப்புகளுடனான விஷேட கருத்திட்டங்களின் அமுலாக்கத்திற்கென 685 மில்லியன்களும் ஒதுக்கப்படுகின்றன.

2016 நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீண்டெழும் செலவிற்கான ஒதுக்கீடு 1,555 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ள அதேவேளை மூலதனக் கொடை 1,989 மில்லியன் ரூபாவினால் குறைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டிற்கான மூலதனக் கொடையினைப் பொறுத்தவரையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடையானது 53 வீதத்தினால் குறைவடைந்துள்ள அதேவேளை பிரமாண அடிப்படையிலான கொடையானது 11 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

அடுத்த ஆண்டிற்குரிய கிழக்கு மாகாணசபையின் மூலதன செலவுகளுக்கான மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு கணிசமான அளவில் குறைந்து காணப்படுகின்றது. எனவே நாம் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்திருந்த அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்ள பொருத்தமான மாற்று உபாயங்களை நாட வேண்டிய நிலையில் உள்ளோம்.

கிழக்கு மாகாணசபைக்கு 2017 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவின நிதியீட்டத்திற்கென மத்திய அரசின் மானியமாக 17,361 மில்லியன் ரூபாவும் அரச வருமான சேகரிப்பாக 3,475 மில்லியன் ரூபாவும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அரச வருமான சேகரிப்பு என்பதில் எமது மாகாண சபையின் வருமான சேகரிப்பு 1,175 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

மொத்த மூலதனச் செலவில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக்கொடையாக 1,544 மில்லியன்களும் பிரமாண

அடிப்படையிலான கொடையாக 514 மில்லியன்களும் விசேட கருத்திட்ட நிதியாக 685 மில்லியன்களும் கிடைக்கப்பெறுகின்றன.

மொத்த மூலதன ஒதுக்கீட்டில் 1,300 மில்லியன் ரூபா சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும், 410 மில்லியன்கள் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும், 474 மில்லியன்கள் உற்பத்தி துறையிலும் முதலீடு செய்யப்படவுள்ளதுடன் வறுமை ஒழிப்பு விசேட திட்டங்களுக்காக 160 மில்லியன்களும் மாகாண நிர்வாக, நிறுவன மேம்பாட்டிற்காக 251 மில்லியன்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும் கிழக்கு மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடாக 7 % ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கௌரவ மாகாணசபை உறுப்பினர்களுக்கு தலா 04 மில்லியன் ரூபா என்ற ரீதியில் மொத்தமாக 148 மில்லியன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி ஒதுக்கீட்டை மக்களிற்கு பயனுள்ள வகையில் பொருத்தமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை தெரிவு செய்து மாகாண அபிவிருத்திக்கு மேலும் வலுச்சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்கு மாகாண சபையின் அபிவிருத்தி கொள்கைகளிற்கு அமைவாக அபிவிருத்தி முதலீடுகளும் அவற்றின் நன்மைகளும் அனைத்து பிரதேசங்களிலும் சகல இன மக்களையும் சென்றடைவதை உறுதி செய்து கொள்வது எமது கடமையாகும். அதே நேரம் அபிவிருத்தி, நிர்வாக நடவடிக்கைகளில் பிராந்திய, சமூக சமநிலையை தொடர்ந்து பேணுவதுடன் வறிய பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் சேவை வழங்கல்களில் கூடிய கவனம் செலுத்தப்படுவதையும் நாம் உறுதி செய்து கொள்வோம்.

எமது அபிவிருத்தி கொள்கைகள், உபாயங்கள் மற்றும் முன்னுரிமைத் திட்டங்கள் என்பவற்றை முழுமையாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான பொறிமுறையினை உருவாக்கி செயற்படுத்தவுள்ளோம்.

**உற்பத்தித்துறை**

கௌரவ தவிசாளர் அவர்களே,

விவசாயம், கைத்தொழில், மீன்பிடி போன்ற உற்பத்தித் துறைகளை மேலும் விருத்தி செய்வதற்கும் இத்துறையிலுள்ள குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்குமான பொருத்தமான உபாயங்களை வகுத்து அதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியமாகிறது. மக்களின் தற்போதைய வாழ்வாதார தொழில்களை பொருளாதார அணுகுமுறையுடன் கூடிய

வர்த்தகத் தொழில் முயற்சியாண்மையாக மாற்றுவதற்கு முனைப்புடன் செயற்பட வேண்டும். எமது மாகாண உற்பத்திகளிற்கு பெறுமதிசேர் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தி முடிவுப்பொருள் வியாபார முயற்சிகளை ஊக்குவிப்பதிலும் சந்தைப்படுத்தல் பொறிமுறையை வலுப்படுத்துவதிலும் விஷேட கவனம் செலுத்தவுள்ளோம். இத்தகைய அணுகுமுறைகளினூடாக உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி, அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்கி, நிரந்தர குடும்ப வருமானத்தினை உறுதிப்படுத்துவதுடன் இவற்றை இலாபகரமான உற்பத்தித்துறையாக மாற்றி கிராமிய பொருளாதாரத்தினையும் மேம்படுத்த முடியும்.

உற்பத்தித் துறை விருத்திக்கான நிகழ்ச்சி திட்டங்களையும் புதிய செயற்பாடுகளையும் உரிய திணைக்களங்களினூடாக முன்னெடுப்பதற்காக அடுத்த ஆண்டில் மொத்தமாக 474 மில்லியன் ரூபா மூலதனச் செலவிற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

உணவுக் களஞ்சியமான எமது மாகாணத்தின் பொருளாதார, சமூக மற்றும் மக்களின் வாழ்வொழுங்கில் விவசாயத்துறை பெரும் பங்களிப்பினைக் கொண்டுள்ளது. ஆகவே விவசாய கைத்தொழில் உள்ளடங்கிய உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த மாகாணமாக மாறுவதுடன் மிகை உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2017 இல் 225 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இவ்விலக்கினை அடையும்பொருட்டு தேவையான விவசாயத்துறை உட்கட்டமைப்பு, நிறுவன வசதிகளை மேம்படுத்துவதுடன் அதற்கேற்ப நீர்ப்பாசனத்துறை விருத்தியும் விரிவாக்கமும் மேற்கொள்ளப்படவுள்ளது. நீர்ப்பாசன அபிவிருத்திக்கு அடுத்த ஆண்டிற்கென 100 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

கிடைக்கத்தக்க வளங்களுடன் ஒப்பிடுகையில் மீன் உற்பத்தியும் அதனோடு இணைந்த நடவடிக்கைகளும் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. முன்னேறிய நவீன தொழிநுட்பத்துடன் கூடிய வினைத்திறனான மீன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் என்பனவற்றுடன் பெறுமதி சேர் செயற்பாடுகள் மற்றும் ஏற்றுமதி வியாபாரம் என்பவற்றிலும் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். கரையோர மீன்பிடி குறைவடைந்துள்ள நிலையில் மாற்று உபாயமாக நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளை ஊக்குவிக்க வேண்டியுள்ளது. வாழ்வாதார தொழில்கள் என்றவகையில் வறிய மீனவர்களிற்கு உள்ளீட்டு உதவிகள் வழங்கும் திட்டங்கள் மற்றும் சிறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

கைத்தொழில், துரித வளர்ச்சி பெறுகின்ற ஒரு துறையாகவும் அதற்குரிய சாத்தியமான வளங்களையும் ஆற்றல்களையும் கொண்ட பிரதேசங்களை உள்ளடக்கியதாக எமது மாகாணம் விளங்குகிறது.

சிறிய நடுத்தர வர்த்தக முயற்சிகளுக்கான தொழிற்பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதனூடாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி கிராமிய பொருளாதாரத்தினை விரிவாக்கம் செய்ய முடியும். இத்துறையினை விருத்தி செய்வதற்காக அடுத்த ஆண்டிற்கு 40 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

இயற்கை வனப்புடன் கூடிய அதிகளவு சுற்றுலா தளங்களை தன்னகத்தே கொண்டுள்ள எமது மாகாணம், சுற்றுலாத்துறையில் துரித வளர்ச்சி கண்டுவருகிறது. சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் மத்திய அரசாங்கம் மேலும் குறிப்பிடத்தக்க திட்டங்களை எமது மாகாணத்தில் செயற்படுத்த தயாராகவுள்ளது. இத்துறையில் தனியார் முதலீட்டினை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளிலும் சுற்றுலாத்துறையுடன் இணைந்த தொழில்கள் மற்றும் வியாபார முயற்சிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்தவுள்ளோம். இவ்வாறான நடவடிக்களுக்காக 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுகின்றது.

**பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள்**

கௌரவ தவிசாளர் அவர்களே,

எமது மாகாணத்தில் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளும் கட்டுமானங்களும் பெரிய சிறிய அளவுகளில் தேசிய நிறுவனங்களினாலும் விசேட திட்டங்கள் மூலமும் மேலும் ஒரு பகுதி எமது மாகாண நிறுவனங்களின் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய உட்கட்டுமாண விருத்திகள் பிராந்திய சமூக பொருளாதார அபிவிருத்திக்கு வழிகோலியதனுடன் அதன் பலாபலன்களை நாம் தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

பல உபதுறைகளையும் உள்ளடக்கி 2017 ஆம் ஆண்டிற்கென பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திகளிற்காக 410 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக உரிய மாகாண திணைக்களங்களிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் மாகாண கிராமிய வீதிகள்

வலையமைப்பு, சிறு பாலங்கள் கட்டுமானங்கள், கிராமிய மின்சார வசதிகள், சிறிய நீர்வழங்கல் திட்டங்கள், வீடமைப்பு உதவிகள், போக்குவரத்து மேம்பாடு, கழிவு முகாமைத்துவம் மற்றும் உள்ளூராட்சி சேவைகள் என்பன அபிவிருத்திசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார உட்கட்டமைப்பு செயற்திட்டங்களில் மத்திய அரசாங்கத்திலிருந்தும் வெளிநாட்டு நிதியுதவியுடனான செயற்திட்டங்களிலிருந்தும் பெருமளவு முதலீடுகள் உள்வாங்கப்படுகின்றன. அடுத்துவரும் ஆண்டுகளில் அவ்வாறான அபிவிருத்தி முதலீடுகளை அதிகரிக்கச் செய்வதிலும் பயன்மிக்க திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்வதிலும் தீவிர கவனம் செலுத்துவோம். அதேநேரம் அபிவிருத்திக்கென கிடைக்கின்ற மாகாண நிதியினை பயன்படுத்துவதில் பரந்துபட்ட வகையில் முன்னுரிமைத் தெரிவுகளுடன் கூடிய சிறந்த நிகழ்ச்சித்திட்டமொன்றினை தயாரித்து மக்கள் மேலும் பயனுறும் வகையில் நடைமுறைப்படுத்தவுள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## சமூக உட்கட்டமைப்பு வசதிகளும் சேவைகளும்

கௌரவ தவிசாளர் அவர்களே,

எமது மாகாண சபை கட்டமைப்பிலும் அதன் நிதி, நிர்வாக, அபிவிருத்தி செயற்பாடுகளிலும் கல்வி, சுகாதாரம் என்பவை உள்ளடங்கிய சமூக உட்கட்டமைப்பு வசதிகள், சேவைகள் என்ற வகுதியே பெரும்பங்கினை கொண்டுள்ளது. இவ்விரு பிரதான துறைகளிலும் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி முதலீடுகள், சேவைகளின் விரிவாக்கம், ஆளணி விஸ்தரிப்பு, நவீன தொழில் முறைகளின் அறிமுகம் என்பவை காரணமாக மனித வள அபிவிருத்தியில் சிறந்த ஒரு நிலைக்கு நாம் அண்மித்துள்ளோம்.

சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களையும் புதிய செயற்பாடுகளையும் உரிய திணைக்களங்களினூடாக முன்னெடுப்பதற்காக அடுத்த ஆண்டில் மொத்தமாக 1,300 மில்லியன் ரூபா மூலதனச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## கல்வி மற்றும் சுகாதாரம்

கல்வி, சுகாதாரம் ஆகிய இரு துறைகளில் அபிவிருத்தி முதலீடு என்பது தனியே மூலதன செலவினமாக மட்டுமன்றி

சேவைவழங்கல்கள் என்ற வகையில் அவற்றில் பெரும்பகுதி மீண்டெழும் செலவினங்களையும் உள்ளடக்கியதாக அமைகிறது. மீண்டெழும் செலவினங்களிற்கென கல்வி மற்றும் சுகாதார துறைகளிற்கு முறையே 11,359 மில்லியன்களும் 4,773 மில்லியன்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது 2016 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது 7% அதிகரித்து காணப்படுகின்றது.

கல்வித் துறையினைப் பொறுத்தவரையில் இவ்வாண்டுக்கான மூலதனச் செலவினமாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடையிலிருந்து 190 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2016 உடன் ஒப்பிடுகையில் 18 % மட்டுமே ஆகும். மாகாண சபைக்கான மூலதன நிதி குறைப்பு எமக்கு பாரிய சவாலாக அமைந்துள்ளது. அது மட்டுமன்றி அபிவிருத்திக்கான நிதிப்பாய்ச்சல்களில் ஒரு நெருக்கடிநிலையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் கிடைக்கப்பெற்ற நிதியினை மாகாண பாடசாலைகளுக்கிடையில் வினைத்திறனான முறையில் பயன்படுத்தி சிறந்த பெறுபேற்றை அடைய எத்தனிக்கின்றோம்.

பாடசாலை மட்டத்தில் சுகாதாரம், விளையாட்டு, தகவல் தொழிநுட்பம், கற்பித்தல் திறன் மற்றும் கல்வி முகாமைத்துவம் என்பவற்றிலும் உரிய அளவுகளில் கவனம் செலுத்தி ஒருங்கிணைந்த அபிவிருத்தியினை அடையும் வகையில் கல்வித்துறை நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். உயர்கல்வி, தொழில்வாய்ப்பு என்பன கருதி ஆங்கிலமொழித் தேர்ச்சியிலும் தொழில்நுட்ப கல்வியிலும் நாம் அதிக அக்கறை கொள்ள வேண்டியுள்ளதுடன் அவற்றிற்கான பலதரப்பட்ட முன்னெடுப்புகளையும் மேற்கொள்ளவுள்ளோம். அத்துடன் பாடசாலை இடைவிலகல்களினை முற்றாக இல்லாது ஆக்குவதற்கான மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி தொடர்பில் கூடிய கவனம் செலுத்த உள்ளோம்.

சுதேச மருத்துவம் அடங்கலான சுகாதாரத் துறைக்கு இவ்வாண்டு மூலதனச் செலவினமாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடையிலிருந்து 265 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்ததொன்றாகும். இந்நிதியினை பயன்படுத்தி சுகாதார துறையின் சிறந்த சேவை வழங்கலை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட இந்த நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணவேலைகள் மற்றும் உள்ளக வசதிகளை மேம்படுத்தும் திட்டங்கள் பரந்துபட்ட பகிர்வுகளுடன் முன்னுரிமையடிப்படையில் அடுத்த ஆண்டு நிகழ்ச்சித்திட்டங்களில் உள்வாங்கப்படும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

பொதுவாக மாகாண சுகாதார குறிகாட்டிகள் சிறப்பாக காணப்படுகின்ற போதும், மேலும் நவீன சிகிச்சை முறைகளுடன் தரமான சுகாதார சேவைகளை உள்ளூர் மட்டத்திலேயே இலகுவாக பெற்றுக்கொள்ளச் செய்வதும் அதனூடாக ஆரோக்கியமான சமூகத்தை நிலைநிறுத்துவதும் எமது தலையாய கடமையாகும்.

மேலைத்தேய மற்றும் சுதேச மருத்துவ துறைகளிடையே சிறந்த இணைப்புத்தன்மையை பேணி நிகழ்ச்சிதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் சுகாதார சேவை வழங்கலில் தனியார் துறையின் பங்களிப்பு ஊக்குவிக்கப்படும்.

மேலும் சமூகத்தின் நலிவுற்ற தரப்பினரின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் என்பன சமூக சேவை செயற்திட்டங்களினூடாகவும் நலச்சேவை வசதிகளினூடாகவும் சிறந்த முறையில் வடிவமைத்து செயற்படுத்தப்பட்டு வருவதுடன் விளையாட்டுதுறை மேம்பாட்டினூடாக ஆரோக்கியத்தையும் நற்பண்புகளையும் விருத்தி செய்து ஒழுக்கமுடைய பிரஜைகளையும் ஆரோக்கியமான சமூகத்தினையும் உருவாக்குவதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். அத்துடன் எமது கலாசார மேம்பாட்டிற்காகவும் விழுமியங்களை பேணிப்பாதுகாக்கவும் விசேட செயற்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

கல்வி மற்றும் சுகாதார துறைகளில் வெளிநாட்டு நிதியளிப்புடன் ஏற்கனவே இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இரு விசேட கருத்திட்டங்களை அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்த 685 மில்லியன் ரூபா மூலதனச் செலவினமாக மாகாண திணைக்களங்களிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## விசேட செயற்திட்டங்கள்

கௌரவ தவிசாளர் அவர்களே!

மாகாண சபை நிதியீட்டத்துடனான நிகழ்ச்சி திட்டங்களிற்கு மேலதிகமாக மத்திய அரச நிறுவனங்களினாலும் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்புடனும் நடைமுறைப்படுத்தப்படும் விசேட கருத்திட்டங்கள் தொடர்பாக இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது என நான் நம்புகின்றேன்.

உலக வங்கியின் நிதியளிப்புடனான இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டில் 360 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன. அதேபோன்று உலக வங்கி, மற்றும் அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் அனுசரணையுடன்

முன்னெடுக்கப்படுகின்ற அறிவு மையத்தின் அடிப்படையிலான பாடசாலைக் கல்வி திட்டத்திற்கு 325 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுகிறது.

நடைமுறையிலுள்ள இத்திட்டங்களுடன் அடுத்த ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியுடன் மேலும் சில புதிய கருத்திட்டங்கள் எமது மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. கிராமிய மாகாண வீதி வலையமைப்பினை மேம்படுத்தும் பொருட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி திட்டம் (i Road) நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாகாணத்தின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கி 668 km கிராமிய மாகாண வீதிகள் அடையாளங் காணப்பட்டதுடன் அவை அடுத்துவரும் நான்கு வருடங்களில் அபிவிருத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் மேலும் 350 km வீதிகளை இத்திட்டத்தின் கீழ் உள்வாங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியளிப்புடன் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளினூடாக வறுமைக்குறைப்பு என்ற நோக்குடன் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டம் (RIDEP) நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் கிராமிய குடிநீர் வழங்கல், விவசாய நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய வீதிகள் ஆகிய உபதுறைகளைக் கொண்டிருப்பதுடன் கிழக்கு மாகாணத்தில் 3,200 மில்லியன் ரூபா செலவில் அடுத்துவரும் மூன்று ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இவை தவிர நிரல் அமைச்சு மற்றும் தேசிய நிறுவனங்களுடன் இணைந்து பொருத்தமான துறைகளில் அபிவிருத்திச் செயற்பாடுகள் அடுத்த ஆண்டிலும் உரிய மாகாண திணைக்களங்களினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

**வறுமை ஒழிப்பும் வேலை வாய்ப்பும்**

கௌரவ தவிசாளர் அவர்களே,

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 2017 ஆம் ஆண்டினை "வறுமை ஒழிப்பு வருடம்" என பிரகடனம் செய்துள்ளார். அதற்கமைய எமது மாகாண சபையும் அடுத்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் வறுமை ஒழிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றது. சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் தமது நிகழ்ச்சித்திட்டங்களில் இவ்வெண்ணக்கருவினை உள்வாங்கி பொருத்தமான கருத்திட்டங்களை

நடைமுறைப்படுத்தும். இவற்றுக்கு புறம்பாக, மாகாண சபையின் வறுமை ஒழிப்பு திட்டத்தின் கீழ் வறிய பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்கென 120 மில்லியன் ரூபாவும், சமமான பிராந்திய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக மேலும் 40 மில்லியன் ரூபாவும் அடுத்த ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதும் அதனூடாக நிலையான குடும்ப வருமானத்தினை ஏற்படுத்துவதும் எமது முன்னுரிமைத் தேவையாக உள்ளது. இவ் இலக்கினை ஒட்டியதாக எமது மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிர்வாக செயற்பாடுகள் அமையும். அத்துடன் இதற்கான சகல உபாயங்களையும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்லவுள்ளோம்.

**மத்திய நிறுவனங்களிலிருந்து நிதிவழங்களை திரட்டுதல்**

மாகாணத்தின் அபிவிருத்தித் தேவைகள், அதனோடு இணைந்த துறைசார் இலக்குகள் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் எமது மாகாணத்திற்கான நிதியீட்டமானது மிகக்குறைவாகக் காணப்படுவது எமக்கு பாரிய சவாலாக உள்ளது. இவற்றினை ஓரளவேனும் ஈடு செய்வதற்கு நாம் மாற்று உபாயங்களாக வேறு நிதிமூலங்களை நாட வேண்டியுள்ளது.

தேசிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினது அடுத்த வருடத்திற்கான அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகளில் கிழக்கு மாகாணத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்களை உரிய அளவில் உறுதிப்படுத்துவதோடு எமது மாகாணத்தில் அடையாளங்காணப்பட்ட தேவைகளை நிவர்த்திசெய்வதற்கு ஏதுவாக நாம் திட்ட முன்மொழிவுகளை தயாரித்து சம்பந்தப்பட்ட தேசிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு சமர்ப்பிப்பதன் வாயிலாக மாகாணத்திற்கான நிதியீட்டத்தினை அதிகரிக்க முயற்சிக்கின்றோம்.

இந்த நடவடிக்கை மூலம் கிழக்கு மாகாணத்தில் தேசிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினது நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரிப்பதோடு இந்த நடைமுறையில் மாகாண திணைக்களங்கள் அத்திட்டங்களில் பங்கு கொள்வதாகவோ அல்லது மாகாண சபைக்கு மேலதிக நிதியீட்டத்தினைப் பெற்று எமது திணைக்களங்களால் நேரடியாக நடைமுறைப்படுத்துவதாகவோ அமையும். இதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் அனைவரும் இணைந்து முன்னெடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

### முதலீடுகளும் தனியார் துறை பங்களிப்பும்

கௌரவ தவிசாளர் அவர்களே,

எமது மாகாண அபிவிருத்திக்கான பொதுநிதி போதுமானதாக இல்லை என்பதால் பொருத்தமான துறைகளில் அபிவிருத்தி பங்காளர்கள் என்ற வகையில் தனியார் துறை முதலீட்டினை ஊக்குவிப்பதுடன் அதற்கான சூழலை உருவாக்குவதோடு பொருத்தமான பங்காற்றலையும் நாம் மேற்கொள்ளவேண்டும். இதற்கு ஏதுவான நிகழ்ச்சித்திட்டங்களில் அரச தனியார் துறை கூட்டு முயற்சிகள் ஊக்கப்படுத்தப்படுவதுடன் இவ்வாறான கூட்டு முயற்சிகள் அடுத்துவரும் ஆண்டில் இயலுமான வரையில் உள்வாங்கப்படும்.

இவற்றினூடாக மாகாணத்தின் உள்ளூர் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம் மற்றும் சேவை வழங்கல்கள் என்பவற்றினை அதிகரித்து எமது மாகாணத்தினை துரித அபிவிருத்தி பாதையில் இட்டுச்செல்வதுடன் நாட்டின் மொத்த உற்பத்திக்கு கிழக்கு மாகாண பங்களிப்பினை அதிகரிக்க முடியும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### வருவாய்துறை முன்னேற்றம்

கௌரவ தவிசாளர் அவர்களே!

மாகாண சபையின் வருவாயை அதிகரிக்கும் செயல்முறை நீண்டகாலமாக ஒரு தேக்க நிலையிலேயே காணப்படுகின்றது. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி துறைகளில் வருவாயை அதிகரிப்பதற்கு ஏதுவாக போதுமான சட்ட ஏற்பாடுகளும் நிறுவன ரீதியான சீரமைப்புக்களும் செய்யப்பட வேண்டியுள்ளது. இதன் ஒரு கட்டமாக வருமான சேகரிப்பினை ஊக்குவிப்பதோடு வருமான சேகரிப்பில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதனூடாக மாகாண வருமானங்களை உரிய முறையில் திரட்டவும் அதிகரிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதே போன்று புதிய வருமான மூலங்கள் இனங்காணப்பட்டு அதற்குரிய சட்ட அங்கீகாரம் பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனை அடையும் பொருட்டு மாகாண இறைவரித் திணைக்களம் உள்ளூராட்சி மன்றங்களின் வருவாய்ப்பிரிவு ஆகியன அவற்றுக்கு தேவையான நியதிச்சட்டங்கள், உப விதிகள், ஆளணி மற்றும் முறைமைகள் என்பவற்றுடன் பலப்படுத்தி செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**நிர்வாக மறுசீரமைப்பும் மீள்கட்டமைப்பும்**

கௌரவ தவிசாளர் அவர்களே!

சகல இன மக்களும் நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டுடன் வாழ்கின்ற எமது கிழக்கு மாகாணத்தில் மாகாண சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இவற்றை மென்மேலும் வளர்த்துக் கொள்வதாக அமையவேண்டும்.

நல்லாட்சி மற்றும் நிலையான அபிவிருத்திக்காக பயன்மிக்க சேவையினை உறுதிப்படுத்தவும் மாகாண சபை மேலும் பொறுப்புக்களை ஏற்று நிறைவேற்றவும் ஏதுவாக பொருத்தமான நிறுவன நிர்வாக மறுசீரமைப்புக்களை துரிதமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மாகாண பொதுச்சேவை வினைத்திறன்மிக்கதாகவும் அர்ப்பணிப்புமிக்கதாகவும் மேம்படுத்தப்படவேண்டும். துரித சேவையினை மக்களுக்கு வழங்கும் பொருட்டும் சரியான தகவல் முறைமைகளை பேணவும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட நிர்வாக நடைமுறைகளை நோக்கி நகர வேண்டும். இதன் மூலம் எமது சேவையில் வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாடு என்பவற்றினை வலுப்படுத்திக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைத்து மாகாண நிறுவனங்களையும் இணைத்த வகையில் மத்திய தரவு மையம் ஒன்றினை உருவாக்கி செயற்படுத்தவுள்ளதுடன் மேலும் அபிவிருத்தி, நிதி, தொழிநுட்ப செயற்பாடுகளை ஒன்றிணைத்த உயர்மட்ட ஒழுங்குபடுத்தல் அலகு ஒன்றினையும் உருவாக்கி செயலாற்ற உள்ளோம்.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் உப பிராந்திய அபிவிருத்தி, சமூக நல்லிணக்கம் மற்றும் பல்வகைத்தன்மை என்பவற்றிற்கிடையே சமநிலை பேணப்பட வேண்டும். உரிய நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளினூடாக இவற்றினை அடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

எமது சேவை சகல மக்களையும் பாரபட்சமுமின்றி சென்றடையும் வகையில் மாகாண நிறுவனங்கள் தமது சேவை வழங்கல் மற்றும் தகவல் பரிமாற்றத்தின் போது தேசிய மொழிக் கொள்கையினை முறையாக பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்துகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே!

கிழக்கு மாகாண சபைக்கென 2017 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நல்லாட்சி தத்துவத்துடன் கூடிய நிலையான சமூக பொருளாதார அபிவிருத்தியை பிரதிபலிக்கும் சிறந்த நிகழ்ச்சித் திட்டங்களைக்கொண்ட இவ் வரவு செலவுத்திட்டத்தினை வெற்றிகரமாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நிறைவேற்றுவதற்கு கௌரவ ஆளுநர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டிக்கொள்வதுடன் இவ்வுரையை ஆர்வத்துடன் செவிமடுத்த அனைவருக்கும் நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

வணக்கம்

*இணைப்பு*

## கிழக்கு மாகாண வரவு செலவுத் திட்டம் - 2017

| விபரங்கள் | தொகை (மில். ரூபா) |
|---|---|
| **1. நிதியீட்டம்** | |
| **1.1 மீண்டுவரும் செலவீனங்களுக்கான நிதி மூலம்** | **20,836** |
| *1.1.1 மத்திய அரசினால் வழங்கப்படவிருக்கின்ற தொகுதி மானியம்* | 17,361 |
| *1.1.2 எதிர்பார்க்கப்படும் அரச வருமான சேகரிப்பு* | |
| *மத்திய அரசு வருமான சேகரிப்பு* | 2,300 |
| *மாகாண வருமான சேகரிப்பு* | 1,175 |
| **1.2 மூலதனச் செலவீனங்களுக்கான நிதி மூலம்** | **2,743** |
| *1.2.1 பிரமாண அடிப்படையிலான கொடை* | 514 |
| *1.2.2 மாகாண துறைசார் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை* | 1,544 |
| *1.2.3 விசேட கருத்திட்டங்களுக்கான நிதியளிப்பு* | 685 |
| **மொத்த நிதியீட்டம்** | **23,579** |
| **2. உத்தேச நிதி பயன்பாடு** | |
| **2.1 மீண்டுவரும் செலவீனங்கள்** | **20,836** |
| *2.1.1 ஆளுக்குரிய வேதனங்கள்* | 16,491 |
| *2.1.2 பிரயாணச் செலவுகள்* | 119 |
| *2.1.3 வழங்கல்கள்* | 473 |
| *2.1.4 பராமரிப்பு மற்றும் ஒப்பந்த சேவைகள்* | 1,119 |
| *2.1.5 மாற்றல்கள்* | 2,424 |
| *2.1.6 கொடைகள், மானியங்கள் மற்றும் ஏனையவை* | 210 |
| **2.2 மூலதனச் செலவீனங்கள்** | **2,743** |
| *2.2.1 கௌரவ மாகாண சபை உறுப்பினர்களின் அபிவிருத்தித் திட்டங்கள்* | 148 |
| *2.2.2 நிறுவன அபிவிருத்தயும் மாகாண நிர்வாகமும்* | 251 |
| *2.2.3 துறைசார் அபிவிருத்தி செயற்திட்டங்கள்* | |
| *- பொருளாதார உட்கட்டமைப்பு* | 410 |
| *- சமூக உட்கட்டமைப்பு* | 1,300 |
| *- உற்பத்தித்துறை (விவசாயமும் கைத்தொழிலும்)* | 474 |
| *- சமமான பிராந்திய அபிவிருத்தி திட்டம்* | 40 |
| *- பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்தி திட்டம்* | 120 |
| **மொத்த நிதி பயன்பாடு** | **23,579** |